திரு. கே. எம் ராமசாமி கவுண்டர்: பஞ்சாயத்துக்கள் வறண்ட பஞ்சாயத்துக்கள். எனவே, கோதுமை போன்ற மற்ற உணவுப் பொருட்களைப் பங்கீட்டு முறையில் கொடுக்க, ரேஷன் முறையில் வழங்க வேண்மென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அதோடு, கோபி நில அடமான பாங்கு பற்றிச் சொன்னார்கள். சிறுவலூர், வெள்ளாங்கோயில் முதலியவை ஈரோடு தாலுக்காவிலுள்ள உம்பியாளம் பட்டி வங்கியோடு சேர்க்கப்பட்டிருப்பதால் பணம் வசூல் செய்ய முடியவில்லை. எனவே, கோபிச்செட்டிப்பாளையத்தோடு இணைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யோசனைகளைச் சொன்னார்கள். என்றைக்குமே அவர்களுடைய கோபிசெட்டிப் பாளையத்தைப் பார்த்தால் பசுமையாக இருக்குமே தவிர, அங்கே அந்த மாதிரி நிலைமைகள் இருப்பது, அமைச்சருக்கும் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்ற முறையில் தெளிவாகத் தெரியும். உணவு நிலைமையில் நெருக்கடி இருக்கிற கடுமையான நிலைமை தெரியும். அதற்காகத்தான் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் குறிப்பிட்டேன். எனினும் எவ்வளவு தூரம் செய்ய முடியும், கோதுமை கொடுக்க முடியுமா என்று உணவு அமைச்சரவர்களைக் கலந்து கொண்டு செய்யலாம். வங்கியைக் கோபிசெட்டிப்பாளையத்தோடு இணைக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அது நியாயமான முறை என்றுதான் படுகிறது. அதுபற்றிக் கவனிக்கலாம்.

(உ) கோவை நகரில் பெரியம்மை நோய் பரவி வருதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியமான காரியம் ஒன்றை திரு. எம். பூபதி அவர்கள் மாண்புமிகு சுகாதார அரிசன நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு எம். பூபதி: தலைவரவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு சுகாதார அரிசன நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"கோவை நகரில் கொடிய வைசூரி நோய் பல பகுதிகளுக்கும் பரவி வருகிற நிலைபற்றி"

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, கோயம்புத்தூர் நகராட்சியில் பெரியம்மை நோய் பரவியுள்ளதாகத் தகவல் எதுவுமில்லை. ஈரோடு நகராட்சியில் பெரியம்மையால் ஒருவர் பாதிக்கப்பட்டதாக 12—1—1969-ல் அறிவிப்புப் பெறப்பட்டது. இத் தகவல் கிடைத்ததும் நகராட்சிச் சுகாதார அதிகாரியும் தண்டையார்ப்பேட்டை, தொத்து நோய் மருத்துவ மனையில் பணியாற்றும் ஐ.சி.எம்.ஆர். பொறுப்பிலுள்ள அதிகாரியும் ஈரோட்டிற்குச் செல்லுமாறும் ஈரோடு நகராட்சியில் கொள்ளை நோய் பற்றி ஆய்வு மேற்கொள்ளுமாறும் பணிக்கப்பட்டனர். இக் குழுவினர், பெரியம்மை நோய் மற்றொருவருக்கும் கண்டிருப்பதாகக் கண்டறிந்து அவர் ஈரோட்டிலுள்ள தொத்து நோய்கள் சிகிச்சை மனையில் சேர்க்கப்பட்டார். மேலும், நோய் பரவுவதைத் தடுக்க தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்போது கிடைத்துள்ள தகவலின்படி, இந்த நகராட்சிப் பகுதியில் பெரியம்மை நோய் இல்லை.

திரு. எம். பூபதி: தலைவரவர்களே, பரவலாக அங்கு நோய் இருந்தாலும் அதைப் பொது மக்கள் அங்கிருக்கின்ற நகர் மன்றத்திற்கோ அல்லது சுகாதார அதிகாரிகளுக்கோ ரிப்போர்ட் செய்வதில்லை. தொடர்ந்து

பரவிக்கொண்டு வருகிறது. ஏற்கெனவே, முறையான நடவடிக்கைகளை நகர மன்றத்தினர் எடுத்துக்கொண்டிருந்தனர் ; தடுப்பு ஊசிகள் போடுவதற்கு வசதியிருந்தது. இந்தக் கால கட்டத்திலே நிறுத்தப்பட்டிருக்கிறது. வெளி நாட்டிலேயிருந்து சக்திவாய்ந்த மருந்துகள் கிடைத்தும் அவற்றை முறையாக உபயோகப்படுத்தாமல் இருக்கிறார்கள். இதை அமைச்சரவர்கள் கவனித்துத் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : நல்ல மருந்துகளை உபயோகப்படுத்துவதில்லை என்று கூறுவது அவ்வளவு சரியாக இருக்க முடியாது. நோய் இருக்கிறதுஎன்பதை நகராட்சிக்கோ அல்லது அரசாங்கத்திற்கோ தெரிவிக்கப்பட்டால்தான் எந்தெந்த இடத்தில் நோய் இருக்கிறது, எந்தெந்த மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்ற இப்படிப்பட்ட தகவல்கள் மூலம் அவர்கள் தெரிந்து கொள்ள முடியும். அப்படித் தெரிந்து கொண்டுதான் இந்த நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. அதிகப்படியானவர்களுக்கு இந்த நோய்கள் காணப்படுகின்றன என்றால் மக்கள் மத்தியிலேயிருந்து அரசாங்கத்திற்குத் தகவல் கொடுத்திருப்பார்களேயானால் நடவடிக்கை எடுத்திருக்கலாம். வேறுயாரும் கொடுத்திருப்பதாக அரசாங்கத்திற்குத் தகவல் இருக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியமான காரியம் ஒன்றை திரு. எம். பூபதி அவர்கள் மாண்புமிகு கல்வி–தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

<u>(ஊ) தமிழக கைத்தறி நெசவாளர்க் கூட்டுறவுச் சங்கம், பல நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்கவேண்டிய தொகைகளைக் கொடுக்கத் தவறியதும், நெசவாளர் வேலையின்மையும்.</u>

திரு எம். பூபதி : தலைவரவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு கல்வி–தொழில் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"தமிழக கைத்தறி நெசவாளர் கூட்டுறவு ஸ்தாபனம், கோவை (தொழில்) கைத்தறி நெசவாளர் கூட்டுறவு ஸ்தாபனம், கணபதி கைத்தறி நெசவாளர் கூட்டுறவு ஸ்தாபனம் போன்ற பல நூற்றுக் கணக்கான கைத்தறி நெசவு சொசைட்டிகளுக்குக் கொடுக்கவேண்டிய பல லட்சக் கணக்கான பணத்தைக் கொடுக்காததால் பல ஆயிரக்கணக்கான கை நெசவு தொழிலாளர்கள் வேலையின்றி இருக்கும் அவசரப் பொது முக்கியமான காரியம்".

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, கோயம்புத்தூர் கைத்தறித் தொழில் நெசவாளர்க் கூட்டுறவுச் சங்கம், கணபதி கைத்தறி நெசவாளர்க் கூட்டுறவுச் சங்கம் போன்ற நூற்றுக்கணக்கான நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் பல லட்சம் அளவில் கொடுக்க வேண்டிய தொகைகளைக் கொடுக்கத் தவறியது என்றும், அதன் விளைவாகப் பல்லாயிரக்கணக்கான நெசவாளர்கள் வேலையிழந்துள்ளனர் என்றும் அரசின் நாட்டத்துக்குக் கொண்டு வந்துள்ளார் உறுப்பினரவர்கள்.

தமிழ்நாட்டில் உற்பத்தி விற்பனை ஆரம்ப நெசவாளர்க் கூட்டுறவுச் சங்கங்கள் 1,072 உள்ளன. அவற்றில் 132 கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ளன.